1978 ஆகஸ்ட் 31] [திரு. கே. இராஜா முகமது]

களையும் குளிர் பதன சாதனங்களையும் ஏற்றுக்கொண்டு அயனாவரம் கூட்டுறவு பால் வழங்கு சங்கத்தின் சென்னையில் உள்ள வியாபார நடவடிக்கைகளை 1976 ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள் 1-ந் தேதி முதல் மேற்கொண்டு வருகிறது. பால் சேகரிப்பு வேலையை அயன்புரம் பால்வள நிறுவனமே தொடர்ந்து செய்து வருகிறது.

(ஆ) சென்னை நகரவாசிகளுக்கு நல்ல பதப்படுத்திய பாலை முறையாக வழங்குவதை ஒன்றுக்கு மேற்பட்ட நிறுவனங்கள் செய்யாமல் ஓரே நிறுவனமே செய்வதுதான் பொருத்தமானது என்ற கருத்தின் அடிப்படையில் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டது. தமிழ்நாடு பால்வள நிறுவனத்திற்கு நவீன வசதிகள் இருப்பதால் அதுவே இந்தத் தொழிலைச் செய்யப் பொருத்தமானது என்று கருதப்பட்டு இத் தொழில் அதனிடம் ஒப்படைக்கப்பட்டது.

திரு. ஆர். சண்முகம்: பேரவைத் தலைவர் அவர்களே, கிராமப் பகுதியிலுள்ள கூட்டுறவு சங்கங்களுடைய அனுமதி இல்லாமலேயே அரசாங்கம் எடுத்துக்கொள்கின்றது என்பது உண்மையா?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: பேரவைத் தலைவர் அவர்களே, அயன்புரம் பால் வழங்கும் ஒன்றியத்தை இன்னும் குறுகிய காலத்தில் உற்பத்தியாளர் பால் ஒன்றியமாக மாற்றுவதற்கான ஆணை பிறப்பிக்கப்பட இருக்கிறது. இதுவரை பால் வழங்கு சங்கங்களாக இருந்தவை எல்லாம் இனிமேல் உற்பத்தியாளர் சங்கங்களாகமாற இருக்கிற காரணத்தால், அப்படிப்பட்ட மாறுதல் ஏற்படுகின்ற நேரத்தில் அந்தந்தச் சங்கங்களினுடைய அனுமதியைப் பெற்று அரசு செயல்படுத்தும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பூலத்தூரில் ஆரம்ப சுகாதார நிலையம்.

*வினா 19— திரு. கே. பண்ணை சேதுராம்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) கொடைக்கானல் மலைப்பகுதியான பூலத்தூர் கிராமத்தில் ஊராட்சி ஒன்றிய Primary Health Centre இரண்டு ஆண்டுகளுக்கு முன் துவக்கப்பட்டு திடீரென்று மூடப்பட்டுள்ளது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அதை மறுபடியும் திறப்பதற்கு அரசு ஏதேனும் நடவடிக்கை எடுத்துள்ளதா?

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்தரராஜன்: (அ) பூலத்தூர் கிராமத்தில் இதுவரை ஆரம்பச் சுகாதார நிலையம் எதுவும் நிறுவப்படவில்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

திரு. கே. பண்ணை சேதுராம் : ஆரம்பத்திலே ஆரம்பிக்கப் பட்ட அடிப்படையிலே, பின்பு தனியாக நிறுவப்பட்டது என்று கூறுகிறார்கள். ஆனால் அமைச்சர் அவர்கள் பதில் வேறு வித மாக இருக்கின்ற காரணத்தினால், தற்சமயம் நடமாடும் ஆஸ்பத் திரிகள் கொடுப்பதற்கு அரசு முன் வருமா என்று அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். செளந்தரராஜன் : தலைவர் அவர்களே, ஆரம்பத்திலே ஆரம்பிக்கப்பட்டது ஆரம்பச் சுகாதார நிலையம் அல்ல. ஆரம்பச் சுகாதார நிலையத்தோடு, துணையாக நிறுவப்பட்டது குடும்ப நல நிலையம் ஆகும். அங்கே நடமாடும் மருத்துவ மனைகள் ஏற்படுத்துவது குறித்து அரசு பரிசீலனை செய்யும்.

இயங்கும் மருத்துவ மனைகள்

*வின 20— திரு. வி. கே. கோதண்டராமன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) இயங்கும் மருத்துவ மனைகள் தமிழ்நாட்டில் எத்தனை உள்ளன?

(ஆ) அதனால் ஏற்பட்ட பலன்கள் யாவை?

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். செளந்தரராஜன் : (அ) இயங் கும் மருத்துவமனைகள் தமிழ்நாட்டில் 11 இடங்களில் உள்ளன.

(ஆ) இந்த இயங்கும் மருத்துவ மனைகளினால் தொலை தூரங் களில் இருக்கும் மிகச் சிறிய கிராமங்களில் இருக்கும் மக்கள் உட னடி மருத்துவ உதவி பெறுகின்றனர். அவசரமான, ஆபத்தான நிலையில் உள்ள நோயாளிகளை உடனடியாக மருத்துவமனையில் சேர்த்ததின் மூலம் பல நோயாளிகளின் உயிர் காக்கப்பட்டிருக் கிறது.

திரு. வி. கே. கோதண்டராமன் : சார், 11 மருத்துவ மனை கள் இயங்கினாலும், மாவட்டத்திற்கு ஒன்றுகூட கிடையாது. 35 லட்சம் ஜனத்தொகை கொண்ட மாவட்டமும் உண்டு ; 20, 25 லட்சம் பேர்களைக் கொண்ட ஜனத்தொகை உள்ள மாவட்டங் களும் உண்டு. மூலை முடுக்குகளிலும், மலை அடிவாரங்களிலும் உள்ள மக்களை எப்படிக் கொண்டு வரமுடியும் என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இன்றைக்கு உணருகிறார்களா? ஆகவே, அதிகப்படியான நடமாடும் மருத்துவ மனைகளை அமைத்து மக்களுக்குப் பலன் ஏற்படும் வகையில், நடவடிக்கை எடுக்க முன் வருவார்களா?